# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12359/F/2023**

திரு V.M..மகாதேவராவ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருப்பத்தூர்-635 601

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 24.03.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 13.05.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 08.07.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு V.M..மகாதேவராவ் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு பெ.சென்னகேசவன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு

செய்கிறது. அவர் சார்பாக திருமதி. தி.வி.ஐரீன் பிரியதர்ஷினி, நேர்முக உதவியாளர் வேளாண்மைத்துறை திருப்பத்தூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சிறு கரும்பு விவசாயி 2.25 ஏக்கர் கரும்பு தோட்டத்தில் கடந்த 03.03.2023 தேதி மதியம் 1.00 மணிக்கு தீ பிடித்து எரிந்து கருகி நாசம் அடைந்து விட்டது. கரும்பு தோட்டத்தின் இடையில் இருந்த 8 தென்னமரங்களும் எரிந்து நாசமாகிவிட்டது. சேதாரத்திற்கு அரசிடமிருந்து நிவாரண தொகை பெற வழிவகை உள்ளதா என்பது போன்ற முழு விவரங்களை 2 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரும் தகவல்கள் வேளாண்மைத்துறை சார்ந்தது அல்ல என்றும் கூட்டுறவுத்துறைக்கானது என்று கோரினார். மேலும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் அனைத்தும் கோரிக்கை மனுவாக உள்ள நிலையில் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் வேண்டுமென்றே வேளாண்மைத்துறைக்கு ஏன் மாற்றம் செய்தீர்கள். இனி வரும் காலங்களில் இவ்வாறாக செயல்படாமல் தகுந்த துறைக்கு மாற்றம் செய்ய வேண்டும் என இவ்வாணையம் எச்சரிக்கின்றது. எனவே மனுதாரரின் இம்மனுவை தள்ளுப்படி செய்ததன் அடிப்படையில் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.</u> <u>SA 12359/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601

**<u>மனுதாரர்  SA  12359/F/2023</u>**

திரு V.M..மகாதேவராவ்
த/பெ வெங்கோபராவ்,
ஜலகாம்பாறை கிராமம்,
பெருமாப்பட்டு அஞ்சல்,
திருப்பத்தூர் மற்றும் மாவட்டம்-635 702

Copy to: File
VPS /PA /15.04.2025